பதிவஞ்சல்

ந.க.எண்:7591/அ1/2018

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி,
வேலூர்-9. நாள்:12.11.2020.

பொருள்: பொது சுகாதாரம் - பணியாளர்குழு - திருமதி.ர.வித்யா, முன்னாள் இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம் - பணியிட மாறுதல் காரணமாக இவ்வலுவலக பணியிலிருந்து விடுவித்தது - பணிவரன்முறை ஆணை மற்றும் கல்வித்தகுதிச்சான்றுகள் அனுப்புதல் - சார்பாக.

பார்வை: 1.இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:65221/பதொ4/15/இரு3, நாள்:07.08.2020.
2.அரசாணை (உப) எண்:81, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்(ஏபி1) துறை நாள்:25.07.2020.

-------

பார்வை 1-ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்ட பணிவரன்முறை ஆணை மற்றும் அசல் கல்வித்தகுதிச்சான்றுகள் கீழ்கண்டவாறு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறத.

1.பார்வை 2-ல் காணும் அரசாணை(பணிவரன்முறை ஆணை அசல்-1).

2.பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல்-2.

3.பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல்-3

4.மாற்றுச்சான்றிதழ் அசல்-1

5.சாதிச்சான்றிதழ் அசல்-1

மேற்கண்ட ஆணை மற்றும் சான்றுகள் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகை வழங்குமாறு கக்கதேசம் ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்பம்/- மரு.T.மணிவண்ணன்,
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்(முகூபொ)
வேலூர்.

பெறுநர்

வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், கக்கதேசம்.

/உண்மை நகல் - உத்தரவின்படி - அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.
16/11/2020 16.11.2020

உபரி:1
ராபி/

Scanned with CamScanner

சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திருமதி ர.வித்யா, இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.த.ரமேஷ் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.81

நாள்: 25.07.2020.

திருவள்ளுவர் ஆண்டு–2051
சார்வரி, ஆவணி – 04

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.65221/ப.தொ.4/இரு.3/2015, நாள்.18.07.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

-----

**ஆணை:**

திரு.த.ரமேஷ் என்பவர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் திருவண்ணாமலை சுகாதாரப் பகுதி மாவட்டம், மேல்பள்ளிப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமைப்பவர் மற்றும் நீராளுநராக பணியாற்றி வரும்போது 20.08.2004 அன்று காலமானார். மறைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி ர.வித்யா என்பவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் பேரில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 05.09.2018 அன்று முற்பகல் வேலூர் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகத்தில் பணியில் இணைந்துள்ளார். எனவே, தனியரின் பணியினை, அவர் வகிக்கும் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 05.09.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி ர.வித்யா என்பவர் பற்றிய விபரங்கள், சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவை 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010–2 மற்றும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு ஆய்வு செய்யப்பட்டன. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு பெறுவதிலிருந்து விலக்களிப்பட்டுள்ள நிலையில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி ர.வித்யா என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு

Scanned with CamScanner

மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 05.09.2018 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

3. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.4484/க்யூ1/2020, நாள் 04.06.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.13717/ஜி2/2020–1, நாள்: 06.06.2020 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசுச் முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை– 600 006.
தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை–600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர் மாவட்டம், வேலூர்.
<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner